### ஆலந்தூர்-போரூர் இடையே

# மின்சார ஆட்டோ சேவை

## மெட்ரோ ரெயில் நிறுவனம் ஏற்பாடு

சென்னை, ஜன.12–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 'நம்ம ஆட்டோ' திட்டத்தின் கீழ் பயணிகள் நலன் கருதி ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து போரூரில் உள்ள டி.எல்.எப். நிறுவனம் வரையிலான சேவையை தொடங்கியது.

சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்ட இந்த சேவையை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன இயக்குனர் (திட்டம் மற்றும் இயக்கம்) நரசிம் பிரசாத் தொடங்கி வைத்து பேசும் போது,'சென்னையில் சுற்றுப்புறசூழலை கருத்தில் கொண்டு மின்சார ஆட்டோக்கள் சேவை தொடங்கப்பட்டு உள்ளது. பயணிகள் வரவேற்பை பொறுத்து பிற ரெயில் நிலையங்களிலும் இந்த திட்டத்தை தொடங்க மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டு உள்ளது' என்றார்.

நிகழ்ச்சியில்'நம்ம ஆட்டோ' திட்ட மேலாளர் மஞ்சு மேனன் மற்றும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். முதல் கட்டமாக 3 ஆட்டோக்கள் ஆலந்தூரில் இருந்து இயக்கப்படுகிறது. இதில் பயணம் செய்ய ரூ.10 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.